Unit 3

# 5. இலக்கிய இயக்கங்கள்

## இலக்கிய இயக்கங்கள்

இலக்கியம் பற்றியும் இலக்கியத் திறனாய்வு பற்றியும் அறிய விரும்புபவர், இலக்கிய இயக்கங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதும் அவசியமாகின்றது. காலந்தோறும் ஏற்படும் சமுதாய, அரசியல், பொருளாதார மாற்றங்கள் இயக்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாகின்றன. இலக்கியத்தின் இயல்பு, நோக்கம், பண்பு அதன் பாடுபொருள் இவற்றின் மாற்றங்களுக்கும் இலக்கிய இயக்கங்கள் காரணமாவதைக் காணலாம்.

சங்க காலத்தில் வீரமும், காதலும் பாடுபொருளாய் அமைய, உள்ளது கிளத்தலாய்த் தோன்றியன சங்க இலக்கியங்கள். சைவ வைணவ சமய எழுச்சி பக்தி இயக்கத்துக்குக் காரணமாகி பக்தி இலக்கியங்கள் தோன்றின. வடமொழி ஆதிக்கத்திற்கு எதிராகத் தோன்றிய தனித்தமிழ் இயக்கம், மொழித் தூய்மைக் கோட்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்தது. விடுதலை இயக்க காலத்தில் சுயமரியாதை இயக்கம் தோன்றியது. பகுத்தறிவுப் பிரச்சார அடிப்படையில் இலக்கியங்கள் எழுந்தன. காந்தீய இயக்கம், காந்திய சிந்தனைகளின் அடிப்படையில் இலக்கியங்களைத் தோற்றுவித்தது. நாமக்கல் கவிஞர் கவிமணி ஆகியோரின் கவிதைகளிலும் நா.பா. அகிலன் ர.சு. நல்ல பெருமாள் போன்றோரின் புனைகதைகளிலும் காந்தியச் சிந்தனைகள் எதிரொலித்தன. சுரண்டலுக்கு எதிரான சிந்தனைகள் மார்க்கிய இயக்கத்தை தோற்றுவித்தன. பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடும் மார்க்சிய இலக்கியங்கள் எழுந்தன.

இலக்கிய இயக்கங்கள் அவை தோன்றிய சூழல் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம் என்பர் திறனாய்வாளர்., அழகியல் இயக்கங்கள், இலக்கியப் படைப்புகளின் வடிவம், மொழிநடை, உணர்ச்சி வெளிப்பாட்டு முறை, அடிப்படை நோக்கு ஆகியவற்றின் அடிப்படையில் அழகியல் ரீதியாக வகுக்கப்பட்டவை. அழகியல் முறைகளின்

அடிப்படையில் உருவாக்கப்படும் இலக்கிய இயக்கங்கள் செவ்வியல் (Classicism) கற்பனாவாதம் (Romanticism) யதார்த்தவாதம் (Realism) முற்போக்கு அழகியல் (Progressive Aestheitics) நவீனத்துவம் (Modernism) மீ பொருண்மைவாதம் (Meta physics) சோஷாசலிச யதார்த்த வாதம் (Socialist Realism) மாய யதார்த்த வாதம் (Magical Realism) என்பன.

இனி மதக்கோட்பாடுகளை ஒட்டி அவற்றின் அடிப்படையில் இலக்கியம் வகைப்படுத்தப்படுவது (பக்தி இயக்கம்) சைவ இலக்கியம், வைணவ இலக்கியம், கிறித்தவ இலக்கியம் இசுலாமிய இலக்கியம் என்பதாகும்.

## தத்துவக் கோட்பாடுகள்

தத்துவ அடிப்படையில் இலக்கியத்தில் நிகழ்த்தப்படும் முக்கியமான பிரிவுகள் கருத்து முதல் வாதம், பொருள் முதல் வாதம் என்பதாகும். மார்க்சீய ஆய்வுகளில் இலக்கியங்கள் இவ்வாறு பிரிக்கப்படுகின்றன.

கற்பனாவாதம் கருத்து முதல் வாதத்துடன் அதிகச் சார்புள்ளது. யதார்த்தவாதம் பொருள் முதல் வாதச் சார்பு கொண்டது. தத்துவக் கொள்கைகள் இலக்கியத்தில் பாதிப்பு செலுத்தும்போது அப்பாதிப்பை வைத்து இலக்கியக் கால கட்டங்களை வகுப்பதுண்டு. சமீபத்தில் இலக்கியத்தில் அதிகமான பாதிப்பை உருவாக்கிய தத்துவம் இருத்தலியம் ஆகும்.

## அரசியல் கோட்பாடுகள்

அரசியல் கோட்பாடுகளில் இலக்கியத்தை அதிகமாக ஊடுருவியது மார்க்சியமே. இது தொடர்பான சிந்தனைகளால், ஒடுக்கப்பட்டவர்களின் உணர்வுகளை எடுத்துரைப்பதான பெண்ணியம், தலித்தியம் போன்ற இயக்கங்கள் உருவாயின.

## நவீனத்துவம் (Modernism)

நவீனத்துவம் என்பது பழமையிலிருந்து புதுமையை நோக்கிச் செல்வது என்ற பொருளைத் தருவதாக அமைகிறது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல அறிவியல் கண்டுபிடிப்புகள் தோன்றின.

நான் மனிதனில் நம்பிக்கையற்றவன். (காம்யூ) மனிதன், அவனை ஆக்கிய சக்திகளால் கைவிடப்பட்ட மிருகம் (சார்த்தர்) என்ற வரிகள் நவீனத்துவ மூல வாக்கியங்கள். புதுமைப்பித்தன் ஆக்கங்களில் இந்த அவநம்பிக்கை ஓர் எதிர்மறைக் கோணமாக வெளிப்பட்டுக் கொண்டே இருப்பதைக் காணலாம்.

நவீனத்துவ இயக்கத்திற்குள் பல்வேறு பிரிவுகள் இருப்பதைக் காணலாம். இவற்றுள் சில வலுவிழந்து விட்டன. சில மறைந்தும் விட்டன. இவையாவும் யதார்த்த வாதத்திற்கு எதிராகத் தோன்றியவை. இவற்றின் மனப்படிமத்துவம். (Impressionalism) கியூபிசம் (Cub-ism) வோர்ட்டிசம் (Vorticism) வருங்காலத்துவம் (Futerism) வெளிப்பாட்டியல் (Expressionism) மிகைநடப்பியல் (Surrialism) ஆகியன அடங்கும் என்பது மால்கம் பிராட்பரி ஜேம்ஸ் மக்பர்லேக் ஆகியோரது கருத்து.[7] புற யதார்த்தத்தை நிராகரிப்பதே இவற்றின் சரிவுக்குக் காரணமாகக் கூடும்.

## பின் நவீனத்துவம் (Post Modernism)

நவீனத்துவத்துக்கு அடுத்த கட்ட நிலையான பின் நவீனத்துவம் திறனாய்வுலகில் ஒரு கோட்பாடாகப் பேசப்படுகிறது. இலக்கியம் கலை, மொழி பற்றிய கொள்கைகளை நவீனத்துவம் ஏற்றுக் கொண்ட நிலைக்கு மாறுபட்டது பின் நவீனத்துவக் கோட்பாடாகும். வரலாறு, பண்பாடு, நாகரீகம் குடும்பம், ஆண், பெண், சமூக நியதிகள் சமயம் போன்ற அனைத்திலும் காணப்படும் அதிகார மையங்களைக் கட்டழித்துக் காணும் கோட்பாடாக இது பேசப்படுகிறது. மையங்களை உடைத்துப் படைப்பை வெறும் பிரதியாக மட்டுமே தருவதாகும். பின் நவீனத்துவம் பற்றி சு.வேங்கடராமன் பின்வருமாறு விளக்குகிறார்.[8]

தேர்ந்த சொற்கள், நுட்பமான பொருள், மரபு வழிப்பட்ட தொடரமைப்பு, வாக்கிய அமைப்பு முறை என்றும் நிறுவப்பட்ட கதை கூறு மரபு உண்டு. இது நேர்கோட்டு எழுத்து (Linear writing) எனப்படும். இதில் எழுத்துக்கு ஒரு மையம் இருக்கும். தருக்க நெறியும், ஒன்றை யொன்று இணைக்கும் இயைபும் கொண்ட உள்ளார்ந்த கட்டமைப்பு மையத்தை நோக்கிச் செல்வதாக அதில் அமையும்.

## நடப்பியல் (Realism)

யதார்த்தவியல் என்றும் நிகழ்வியல் பாங்கு என்றும் இதனை அழைப்பர். நடப்பியல் புறவயத்தை ஏற்றுக்கொண்ட இலக்கியக் கோட்பாடு ஆகும். வரலாற்றுச் சிறப்பு மிகுந்த கிரேக்கர்கள் நிகழ்வியல் பாங்குக் கொள்கையாளராக (Realist) வாழ்ந்தனர். டிக்கன்ஸ், ஜார்ஜ் எலியட், தாக்கரே, பால்சாக், டால்ஸ்டாய் போன்றவர் மிகப்பெரும் நடப்பியல்வாதிகள் உலகஇலக்கியத்தில் தங்கள் நடப்பியல் கோட்பாட்டினை அழுத்தமாகப் பதித்தவர்கள் எனலாம்.

சமூகம் புறவயமாக அணுகப்பட்டு அதன் பல அம்சங்கள் இலக்கியவாதிகளின் படைப்புக்களில் எதிரொலித்தன. நடப்பியல் கொள்கையின் தாக்கத்தால் சமுதாய மாற்றங்கள் உடனுக்குடன் இலக்கியங்களில் பிரதிபலித்தன. நடப்பியல் ஒன்றில்தான் சமூகத்தின் சகல அம்சங்களையும் பிரதிபலிக்கும் முயற்சி வெற்றி அடைந்துள்ளதாகக் கூறலாம்.

ஜார்ஜ் எலியட் என்ற ஆங்கில நாவலாசிரியை மிகச் சாமான்யமான சமூக நிகழ்ச்சிகளைச் சித்தரிப்பது யதார்த்தவாதம் என்று கூறுகிறார். பெர்னார்ட் ஷா சமூகக் குறைகளை யதார்த்தவாதி சுட்டிக் காட்ட வேண்டும் என்று கருதுபவர். சமூகத்தை உண்மையாகச் சித்தரிக்க வேண்டும் என்ற நோக்கம் நடப்பியலின் அடிப்படைக் கருத்தாகும். இன்று சிறுகதை, புதினம், நாடகம் ஆகிய இலக்கிய வகைகளில் நடப்பியல் மிக அதிகமாக இடம் பெறுவதைக் காணலாம் இவர்கள் படைக்கும் பாத்திரங்கள் வகைப்பாடானவை.(Types)

இந்த வகைப்பாடான பாத்திரப் படைப்பு என்பது பற்றி ஜார்ஜ் லூகாஸ் கூறுவது யதார்த்த இலக்கியத்தில் மையமான கூறு அதன் அடித்தளமான ஒன்று வகைப்பாடான பாத்திரம் என்பது. வகை மாதிரி என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொத்தமான பொதுப்பண்புகள் ஒரு தனிநபர் பாத்திரத்தின் வழியாக வெளிப்படுதலாகும். ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தின் வரலாற்று அம்சங்கள் தனிநபர்கள் மூலமாக வெளிப்படுகின்றன. அவ்வாறு வெளிப்படும் பொழுது அந்தத் தனிநபர் தனித்துவம் பெற்றவராகவும் விளங்குகிறார். அதே சமயத்தில் அவர் அக்கால கட்டத்தின் பொதுப் பண்புகள் அனைத்தையும் உள்ளடக்கியவராக இருக்கிறார். கமலாம்பாள் சரித்திரத்தில் வரும் முத்துசுவாமி அய்யர் அக்காலத்தில் பிரபுத்துவ அமைப்பின் ஒரு வகைப்பாடான படைப்பு. இராஜம் கிருஷ்ணனின் வீடு (1977) புதினத்தில் வரும் தேவி இந்தியக் குடும்பங்களில் காணப்படும் ஒருவகை மாதிரிப் படைப்பு.

## மீ.நடப்பியல் (Surrealism)

மீ.மெய்ம்மை இயல் என்றும் மிகை நடப்பியல் என்றும் இதனை அழைப்பார். சி.சு.செல்லப்பா இதனை அவநடப்பியல் என்றும் தா.ஏ.ஞானமூர்த்தி அடிமன இயல் என்றும் அழைப்பர்.

இருபதாம் நூற்றாண்டில் முற்பகுதியில் பாரிஸ் நகரத்தில் தோன்றி உலகம் முழுவதும் கவனத்தை ஈர்த்த கலை இலக்கிய நடவடிக்கை சர்ரியலிசம் ஆகும். உள்மனத்தின் தடையற்ற சுய இயக்கம் என்பது இச்சொல்லுக்கான பொருளாகும். ஆர்தர் பிராடன் (Andre Breton) ஒரு மனோதத்துவ மாணவர். கவிஞர். சர்ரியலிச இயக்கத்தில் நிறுவனர் இவரே. சர்ரியலிசம் என்ற தன் நூலில் இதுபற்றி விரிவாக விளக்கியுள்ளார் பாலா.[18]

சுருக்கமாக சர்ரியலிசக் கொள்கை கலாச்சார கலை மதிப்புகளைப் பற்றிக் கவலைப்படாது மனதில் உள்ள சிந்தனையை அப்படியே வெளிப்படுத்துவது எனலாம். சர்ரியலிச இயக்கத்தைத் தோற்றுவித்தவரான ஆர்தர் பிரெடன் முதலாவது சர்ரியலிச அறிக்கையில் சர்ரியலிசத்திற்குப் பின் வருமாறு இலக்கணம் கூறுகிறார்.[19]

சர்ரியலிசம் - பெயர்ச்சொல். ஆண்பால் உள்மனத்தின் தடையற்ற சுய இயக்கம். அழகியல் மற்றும் தர்மார்த்த நெறிகளைப் புறம் தள்ளி வைத்துவிட்டு அறிவு எந்தக் கட்டுப்பாடும் விதிக்காத போது சிந்தனை போட்ட டிக்டேஷன் .

உள்மனத்தில் கிளர்ந்தெழும் சிந்தனைகளையும், உணர்வுகளையும் அறிவுலகு தன்னுடைய மரபு மதம் ஒழுக்க நியதி கலாச்சார மதிப்பு போன்ற ஆயுதங்களால் அடிமைப்படுத்தி விடுகின்றது

அமைப்பியல் (Structuralism)

ஒரு படைப்பின் அமைப்பை ஆராய்வதுதான் அமைப்பியல். அமைப்பியல் என்ற இலக்கியத் திறனாய்வு நெறி இன்று உலகெங்கும் பரவியுள்ளது. பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ரோலண்ட் பார்த் என்ற திறனாய்வாளர் அமைப்பியலுக்கு மூலகாரணர். மொழி பற்றிய மொழியாக்கம் தான் அமைப்பியலின் அடிப்படையாகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சசூரின் மொழியியலிலிருந்து அமைப்பியல் துவங்கியது எனலாம். இலக்கியத்தை மொழியாகக் கொள்ள வேண்டும் என்று அமைப்பியல் முன்மொழிகிறது. மொழி அமைப்பைக் கண்டறிவதுபோல் இலக்கியத்திலும் உள்கட்டமைப்பைக் காணுவதை அமைப்பியல் திறனாய்வின் நோக்கமாகக் கொள்ளச் சொல்லுகிறது என்பார் ந.முத்துமோகன்.[21]

டாக்டர் எஸ்.கார்லோஸ் (தமிழவன்) ஸ்டக்சுரலிசம் (Structuralism) என்ற நூலின் ஆசிரியர். இவர் 'அமைப்பியல் திறனாய்வும் தமிழும்' என்ற தன் ஆய்வுக் கட்டுரையில் அமைப்பியலைப் பற்றி விரிவாக விளக்கியுள்ளார். இவர் திறனாய்வாளர்களை

1.இலக்கிய இயல் திறனாய்வாளர்கள் (இலக்கியப் படைப்பே நோக்கமாக உள்ளவர்கள். க.நா.சு., சி.சு போன்றோர்)

2.கல்வியியல் திறனாய்வாளர்கள் (இலக்கியத்தைத் தர நிர்ணயம் செய்வதில்லை.(ஆ.முத்துசிவன் ந.சுப்பு ரெட்டியார் மு.வ.போன்றோர்)

3.வர்க்கமனம் கொண்ட திறனாய்வாளர் (கைலாசபதி போன்றோர்) என்று மூவகையினராகக் காண்கிறார்.

இம்மூவகைக் குழுவினரும் பெரும்பாலும் ஆசிரியனின் சிந்தனையிலிருந்து வெளிவருவதுதான் படைப்பு என்று கருதினார்கள். இதற்கு எதிராக வாசகனின் வெளிப்பாடு தான் படைப்பு என்று மேற்கத்திய இலக்கிய உலகில் ஒரு கருத்து தோன்றியுள்ளது. ஆனால் தமிழில் இம்மூவகைக் குழுவினரும் ஆற்றல் உடைய திறமை படைத்த தனி மனித வெளிப்பாடு இலக்கியம் என்ற கொள்கையைக் கொண்டவர்கள்.

## பெண்ணியம்

சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் சமமாகக் கருதப்பட வேண்டியவர்கள். ஆனால் உலக வரலாற்றில் நீண்ட காலமாகப் பெண்கள் உரிமை மறுக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும் வந்துள்ளனர். பெண்ணியம் என்ற சொல்லுக்கு ஆக்ஸ்போர்டு அகராதி பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது போராடுவது Advocacy of the claims of women என்ற பொருளைக் குறிப்பிட்டுள்ளது. 1830 இல் ஐரோப்பாவில் பெண்கள் வாக்குரிமை பெற்றனர். உலகெங்கிலும் எழுந்த பெண்ணுரிமை பற்றிய விவாதங்கள் நடத்தப்பட்ட மாநாடுகள் பெண்ணுரிமை மறுப்பு சமுதாயப் பிரச்சனைகளில் ஒன்று என்ற அளவில் வளர்ந்து பெண்ணுரிமை இயக்கமாக மாறியது.

மேலை நாடுகளில் பெண்ணியம் என்பது பல்வேறு நிலைகளில் கோட்பாடாக இயக்கமாக வளர்ச்சி பெற்றுள்ளது. ஒடுக்கப்பட்ட பெண்களின் அடிமைநிலையை மாற்ற முற்படும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் இயக்கமே பெண்ணிய இயக்கமாகும்.

இலக்கியத்தில் பெண்ணியம் பதிவாகியிருப்பதை மேலை நாடுகளின் சூழலில் மூன்று வகையாக இருப்பதைச் சுட்டிக்காட்டுவர் திறனாய்வாளர்.[27]

1. **பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வு:** இது முக்கியமாக உளவியல் பகுப்பாய்வுமுறையில் பெண்ணியத்தை விளக்குகிறது. பெண்ணின் சுயமான விருப்பங்கள், உணர்வுகள், அவற்றின் முறிவுகள், சிதைவுகள் முதலியவை உள்ளத்தே அமுத்தப்பட்டிருக்கின்றன என்பதாகச் சொல்கிறது.

2. **ஆங்கிலப் பெண்ணியத் திறனாய்வு:-** இது முக்கியமாக மார்க்சிய ஒளியில் பெண்ணியத்தை விளக்குகிறது. சமுதாய அமைப்பில் பெண்ணடிமைத்தனம் அதன் வடிவங்கள் மற்றும் அதன் வெளிப்பாடுகள் பற்றிச் சொல்லப் பெண் ஒடுக்கி வைக்கப்பட்டிருக்கிறாள் என்ற நிகழ்வை இத்திறனாய்வு முக்கியமாகப் பேசுகிறது.

3. **அமெரிக்கப் பெண்ணியத் திறனாய்வு:-** இது முக்கியமாகப் பனுவலை மையமிட்டு அமைகிறது. பெண்ணியம் இலக்கியப் பனுவல்களில் எவ்வாறு தன்னைச் சொல்லிக் கொள்கிறது அல்லது அவளிடம் வெளிப்படுத்திக் கொள்கிறது என்பதை இது பேசுகிறது. இவை மூன்றினுடைய தாக்கங்களும் தமிழில் உண்டு.

✶பெண்களுக்கு மறுக்கப்படும் கல்வி உரிமையைப் பெண்ணுக்கு வழங்கி ஞானம்பாளை கல்வி அறிவும் துணிச்சலும் உடையவளாகப் படைத்துள்ளார் வேதநாயகம்பிள்ளை (பிரதாப முதலியார் சரித்திரம்-1879)

தலித்தியம்

'தலித்' என்ற சொல் ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற ஒரு பொதுவான பொருளில் வழங்கப்பட்ட மராட்டியச் சொல். ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் என்று வரையறுத்த பொருளில் இன்று வழங்கப்படுகிறது.

தலித்தியத் திறனாய்வு என்பது சமுதாயவியல் திறனாய் வேயாகும். இலக்கியத்தில் தலித்து மக்கள் எவ்வாறு சித்தரிக்கப் பட்டிருக்கிறார்கள் அவர்களுடைய வாழ்க்கை முறைகள், உணர்வுகள், சிந்தனைகள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளன என்று காண்பது இத்திறனாய்வின் நோக்கமாகும். மரபு வழிப்பட்டு இறுகிக் கிடக்கின்ற இந்த சமுதாய அமைப்பு என்ற நிறுவனம் விதித்திருக்கின்ற அடிமைத்தனையிலிருந்து விடுதலை வேண்டுகின்ற உணர்வு தலித்திய உணர்வாகும். சமுதாயவியல் திறனாய்வின் ஏனைய போக்குகளிலிருந்து தலித்தியத் திறனாய்வு இவ்வாறு அடிப்படையில் வேறுபட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுவர் திறனாய்வாளர்.[30]

அம்பேத்கார் நூற்றாண்டு விழாவையொட்டி தலித், தலித் இயக்கம் பற்றிய சிந்தனைகள் தீவிரமடைந்தன. அரசியல், சமுதாயம் இலக்கியம் அனைத்திலும் தலித்திய வெளிப்பாடுகளைக் காணமுடிகிறது. தலித் இலக்கியம் என்றால் என்ன என்பது பற்றி இருவேறு கருத்துக்கள் உள்ளன.

1. தலித்துகளைப் பற்றி எழுதப்பட்ட எல்லா இலக்கியங்களும் தலித் இலக்கியங்களே.
2. தலித் இனத்தைச் சார்ந்த எழுத்தாளர்கள் எழுதுவதே உண்மையான தலித் இலக்கியம். அதில்தான் நம்பகத் தன்மை உள்ளது.

ஆனால் ச.இராசநாயகத்தின் சாமிக்கண்ணு எனச் சில மனிதனின் கதைகள் என்ற நாவலைப் படிப்பின் தலித் அல்லாதோர் எழுதும் இலக்கியமும் தலித் இலக்கியமே என்று எண்ணத் தோன்றும் என்கிறார் முனைவர் ஆனந்தன்.[31]

அமிழ்த்தப்பட்டுக்கிடக்கும் தலித்துகளுக்கு முக்கியமாக இரண்டு பிரச்சனைகள் உள்ளன. முதலில் வர்க்கம் என்ற அடிப்படையில் மிகச் சிறுநிலச் சொந்தக்காரர்களாக அல்லது விவசாயக் கூலிகளாக இருப்பது. அடுத்து சாதீயம் என்ற அடிப்படையில் அடிப்படை உரிமை மறுப்பு.

## மார்க்சியம்

இது ஓர் அரசியல் பொருளாதார சமுதாய தத்துவமாகும். இக்கொள்கையை காரல் மார்க்ஸ் ஹேகல் என்பவருடைய தத்துவத்திலிருந்து தாம் மேற்கொண்டதை வரலாற்றுச் சார்பான அறிக்கையாக வெளியிட்டார்.

வாழ்க்கை படிப்படியாக வளர்ச்சியுறும் தன்மை உடையது என்பது மார்க்சின் கொள்கை. மனித வரலாற்றில் எல்லா வளர்ச்சிகளும் முன்னேற்றங்களும் பொருளாதார வளர்ச்சி முறையாலே ஏற்பட்டன வாகும். மனித சமுதாயம் வர்க்க வேறுபாடற்ற சரிநிகர் சமான நிலையை நோக்கிச் சென்று முடிவில் அந்நிலையை எய்துவதாகும். அத்தகைய சமுதாயத்தில் அரசாங்கம் என்பது இருக்காது. அதில் தேவைகளும் கிடைக்காத பொருள்களும் இருக்காது. இக் குறிக்கோளினை ஒரு பொருளாதார வர்க்கத்தினருக்கும் இன்னொரு பொருளாதார வர்க்கத்தினருக்கும் இடையறாது மோதலை நிகழ்த்தும் இயக்கத்தாலேயே எய்த முடியும்.

நிலவுரிமை முறையும் முதலாளித்துவமும் சமுதாயத்தில் வேறு வேறான பொருளாதார அமைப்புகளாகும். இப்பொருளாதார அமைப்பு ஒவ்வொன்றும் அதற்கென பண்பாடு சமயம், இலக்கியம் ஆகியவைகளைத் தோற்றுவிக்கின்றன. இதுவே மார்க்சிய இலக்கியக் கொள்கையாகும். சமுதாய, பொருளாதார ஆக்கக் கூறுகளே இலக்கியத்தை நிர்ணயிக்கின்றன என்பதே இதன் அடிப்படை. உற்பத்தி அல்லது பொருண்மை வாழ்க்கையின் திறமே சமுதாய அரசியல் வாழ்க்கை முறையையும் நுண்ணறிவு சான்ற வாழ்க்கை முறையையும் நிர்ணயிக்கிறது. மனிதர்களின் உணர்வு நிலை அவர் தம் உயிர் வாழ்தலை நிர்ணயிக்கவில்லை. அவர் தம் சமுதாய வாழ்வே அவர்களுடைய உணர்வு நிலையை நிர்ணயிக்கிறது என்பதே காரல் மார்க்சின் கொள்கை.

## உளவியல்

உளவியல் என்பது மனப்போக்கை, மனத்தின் செயற்பாடுகளை ஆராய்வதாகும். உளவியல் ஆய்வு திறனாய்விலும் இடம் பெறுகிறது. படைப்பாளன் உளவியல், படைப்பின் உள்ளே காணப்படும் உளவியல், படிப்பவர் உளவியல் என இதை விரித்துக் காணலாம். படைப்பிலிருந்து படைப்பாளியையும் படைப்பாளியிடமிருந்து படைப்பையும் ஆய்ந்து அறிதலும் கூடும்.

உளவியலில் ஒரு முக்கியமான கோட்பாடு மனத்தின் நிகழ்ச்சிகள் எல்லாம் விளக்கப்பட முடியும் என்பது. இதற்கான அணுகுமுறை உளவியல் அணுகுமுறையாகும். உளவியல் ஆய்வாளனின் அணுகுமுறைக்கும் இலக்கியத் திறனாய்வாளனின் அணுகுமுறைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுண்டு. ஒருவருக்கு முதன்மையாகத் தோன்றும் குறிப்புக்கள் மற்றவர்க்குத் தேவையற்றனவாகத் தோன்றலாம். தெளிவற்றது எனப் பிறர் ஒதுக்குபவை உளவியலாரின் கண்களுக்கு ஆய்விற்கு உரிய பொருள் ஆகலாம்.

இலக்கியத் திறனாய்விற்குப் பயன்படுத்தப்படும் உளவியல் கொள்கைகளை வகுத்துக் கொடுத்த அறிஞர்கள் மூவர்.

# செவ்வியல் (Classicism)
# புனைவியல் (Romanticism)

செவ்வியல் வாதம், புனைவியல் வாதம் என்ற இரு தொடர்களும் இலக்கியத் திறனாய்வில் அதிகமாகப் பயன்படுத்தப்படுபவை. டி.இ.ஹ்யூம் (T.E.Hulms) இவ்விரு தொடர்களின் பொருளையும் வரையறுத்து இலக்கியத்தில் இவ்விரு கோட்பாடுகளும் பயன்படுத்தப் படுமாற்றையும் தெளிவு படுத்துகின்றார்.

இவ்விரு இலக்கியக் கோட்பாடுகளும் அரசியலுடன் நெருங்கிய தொடர்புடையவை. மனித உரிமைகள் பற்றிய முழக்கங்களே பிரெஞ்சுப் புரட்சியின்போது உலகெங்கும் பேசப்பட்டன. பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவரான ரூசோ மனிதனிடம் நம்பிக்கை வைக்க அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். மனிதன் இயல்பாக நன்மையே உருவானவன். அவனது நல்லியல்பை அடக்கி வைத்துள்ள மோசமான சட்ட திட்டங்களை நீக்கினால் அவன் செயல்திறன் வெளிப்படும் என விளக்கினார். சமூக அரசியல் குழப்பங்களினின்றும் விடுதலை கிடைக்கும் என்ற தெளிவும், நம்பிக்கையும் உறுதியும் பிறப்பதற்கு அடிப்படையாக மனிதனிடம் அவர்கள் வைத்த அளவற்ற நம்பிக்கைதான் இலக்கியத்தில் புனைவியல் இடம் பெற்றதற்கான வித்தாகும்.[36]

## இருத்தலியல் (Existensialism)

மனிதனுடைய இருத்தலை நான் இருக்கிறேன் என்ற சிந்தனையை விளக்கிப் பார்க்கும் நிலைதான் இருத்தலியல் முறை எனப்படுகிறது Ex.Sistire என்ற இலத்தீன் சொற்களிலிருந்து வந்த இந்த சொல் to set forth (முன்னோக்கி) என்ற பொருளைக் குறிக்கிறது. இருத்தலியல் கோட்பாடு சாராம்சக் கோட்பாடு என்றும் வழங்கப்பெறும்.

ஏறக்குறைய 125 ஆண்டுகளாக உள்ள இந்த இருத்தலியல் முறையின் சாராம்சம் மனிதனின் மரணத்துக்குப் பின் உள்ள விசாரணை பற்றியது. வாழ்க்கையின் சிக்கலுக்கு விடை தேடுவதுதான் இருத்தலியலின் தலைமை நோக்கம். மாறிக் கொண்டே இருக்கிற வாழ்க்கையில் அரசியல், மதம் சட்டம், சமயம், அரசு அமைப்பு போன்றவை இல்லாமல் மனிதன் சுதந்திரமாக இருக்க வேண்டும் வடிவமற்ற ஒரு நிலை, தேவையான வடிவத்தை அவ்வப்போது நல்க வேண்டும் வடிவமற்ற தன்மையை விரும்பி வரவேற்கும் நிலை இவர்களுடையது.

## இயற்கையியல் (Naturalism)

இயற்கையியல் நடப்பியலின் ஒரு கிளையாகும். இதனை இயல்பு நெறி என்றும் அழைப்பர். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய கலை இலக்கியக் கோட்பாடுகளில் இயற்கையியலும் ஒன்று. பிரெஞ்சு எழுத்தாளர்களே புதினங்களில் இயற்கையின் உத்திகளைக் கடைப்பிடித்தார்கள். பிளாபர் (Flaubart) மாப்பசான் ஆகியோர் மிகவும் புகழ் வாய்ந்த இயற்கையியல் புதின ஆசிரியர்கள்.

இவ்வுலகம் தானே வாழுதற்குரியது என்றும் தன்னையே தான் விளக்கக்கூடியதென்றும் தன்னையே தான் நெறிப்படுத்திக் கொள்ளுதற்குரிய தென்றும் கருதக்கூடிய இயக்கம்தான் இயற்கைஇயல். இயற்கை இகந்தவியலாக (Supernaturalist) குறிக்கோள் இயலார் (idealist) ஆகியோரின் வாதங்களை இயற்கையியல் எதிர்க்கின்றது.

1. உலகின் இயக்க முறைகள் செயல் நோக்கம் அற்றவை.
2. புறச்சூழ்நிலைகளாலேயே அவை தீர்மானித்து அறியப்படுகின்றன என்பவையே இயற்கைஇயல் இயக்கத்தின் கொள்கைகளாம். இவ்வியக்கத்தாரின் பொதுவான வாதம் இயற்கைக்கு அப்பால் உண்மை யொன்றும் இல்லை என்பதே.

## குறியீட்டியல் (Symbolism)

குறியீட்டியல் என்ற சொல் குறியீடு என்ற (Symbol) சொல்லிலிருந்து தோன்றியதாகும். ஒரு சொல் அதன் பொருளைக் குறிப்பதோடு அதன்கண் காண முடியாத அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளைக் குறிப்பதாகும். நம் வாழ்வில் சகல துறைகளிலும் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. சிலுவையைத் தியாகத்திற்குக் குறியீடாகக் கொள்கிறோம். தராசு நீதியின் குறியீடு. நரி தந்திரத்தின் குறியீடு. கவிஞர்களின் சிறப்பான உணர்வுகளை வெளியிடும் கருவியாக குறியீட்டியல் அமைந்தது.

இலக்கியக் குறியீடுகள் தங்கள் பணி எல்லைகளைப் பரப்ப விழைந்த போது குறியீட்டியல் என்ற இலக்கிய இயக்கம் பிரெஞ்சு நாட்டில் மலர்ந்தது. பிரெஞ்சுக் குறியீட்டுக் கலைகளில் நால்வர் புகழ்பெற்றவர்கள்[50]

| | |
|---|---|
| போதலேர் | (1821 - 1867) |
| பெர்லேன் | (1844 - 1896) |
| ஆர்தர் ரிம்பா | (1854 - 1891) |
| மல்லார்மே | (1842 - 1898) |

சொற்கள் சொல்லற்குரிய குறிப்புப் பொருளைத் தருதலாகிய தனிப் பணியைச் செய்ய வேண்டும். சொற்கள் பகற்கனவை ஒத்த ஆழ்ந்த சிந்தனைகளையும், எதிரொலிகளையும், குறிப்புப் பொருள்களையும் தூண்டுவனவாக இருக்க வேண்டும் என்கிறார். மல்லார் மேயின் குறியீட்டியல் பற்றிய இக்கொள்கை தொல்காப்பியர் கூறும் உள்ளுறை உவமம், உவமப்போலி, இறைச்சி ஆகியவற்றோடு பெரும்பாலும் பொருந்துவனவாக உள்ளது.

# படிமவியல் (Imagism)

படிமம் என்பது அறிவாலும், உணர்ச்சியாலும் ஆன ஒரு மனப்பாவனையை ஒரு நொடிப் பொழுதில் தெரியக் காட்டுவது. கண்ணால் காணக்கூடிய பருப்பொருட்களையோ, மனதால் உணரக்கூடிய நுண்பொருள்களையோ கவிதை நயத்தோடு ஆள்வதும் அவ்வுணர்வைப் படிப்போனிடத்து உணரச் செய்வதும் படிமத்தின் செயற்பாடு எனலாம். இப்படிமத்தை காட்சி உரு என்றும் உருக்காட்சி என்றும் அழைப்பர்.

தமிழிலக்கியத்தில் உவமை உருவகம், முற்றுருவகம் என்றெல்லாம் வழங்கப்பட்ட அணிகள் இன்று படிமம் என்று அழைக்கப்படுகிறது. உளவியல் நோக்கில் நின்ற படிமம் மனப்படிமம் (Mental Image) என்றும் கலையியல் நோக்கில் நின்ற படிமம் அணிப்படிமம் (figurative image) என்றும் குறியீடாக நிற்கும் படிமம் குறியீட்டுப் படிமம் (Symbolic image) என்றும் படிமங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. வாசகர் நோக்கில் சுவைநிலைப் படிமம், நுகர்நிலைப் படிமம், ஒலிப்படிமம், தொடுநிலைப் படிமம், மெய்ப்படிமம் நிறப்படிமம், புலன்மாறு தோற்றப்படிமம் என்று பலவகையான படிமங்களைக் காணலாம்.

படிமவியல் இயக்கம் ஆங்கில, அமெரிக்கக் கவிஞர்களின் ஒருங்கிணைந்த முயற்சியின் விளைவாகத் தோன்றியது. 1909 இல் தோன்றிய இந்த இயக்கம் 1918 வரை அமெரிக்க இங்கிலாந்து நாடுகளில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. 1908 இல் சோஹோ என்னும் இடத்தில் உள்ள உணவு விடுதி யொன்றில் கவிதைபற்றி விவாதித்துக் கொண்டிருந்த ஒரு குழுவின் முதன்மை உறுப்பினரான ஹ்யூம்தான் படிமவியலின் தந்தை என்றழைக்கப்படுகிறார். ரொமான்டிக் மிருதுத் தன்மையிலும், தெளிவின்மையிலும், சொற்களின் வீணடிப்பிலும் நவீன கவிதை தன்னைத் தொலைத்துக் கொண்டிருக்கிறது என்று கூறும் ஹ்யூம் கவிதை புனைவியல் பாங்கை விடுத்து நடப்பியலுக்கு வரவேண்டுமென வற்புறுத்துகிறார்.

1. இலக்கியத்தைப் பொறுத்தவரை பொதுமக்களின் பேச்சு மொழியை உள்ளது உள்ளவாறே பயன்படுத்துதல்

## சிறுகதை அமைப்பு

Unit-4

சிறுகதையில் இடம்பெறும் கருப்பொருளின் புலப்பாடு, கதை மாந்தர் வளர்ச்சி, பண்புவெளிப்பாடு, ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய வடிவம் அமைப்பு ஆகும். கதை எழுதுகிற படைப்பாளனின் மனநிலைக்கேற்ப அமைப்பு உருவாகும் என்பார் புதுமைப்பித்தன். ஒரு கலைப்படைப்பின் வடிவ நிர்ணயிப்பில் கீழ்வரும் அம்சங்கள் பங்காற்றுகின்றன என்பர் திறனாய்வாளர்.[5]

1. கலைப்படைப்பின் உள்ளீடு திறன்கள். அதாவது அதன் உள்ளடக்கம்
2. வர்க்க மனநிலை. கலைஞனின் வர்க்க மனநிலை. கலைஞன் காட்டும் பாத்திரங்களின் மனநிலை
3. அந்நியக் கலை இலக்கியத் தாக்கம்
4. பண்டைய மரபுகளின் செல்வாக்கும் அவற்றிலிருந்து விடுபடத் துடிக்கும் முயற்சியும்.
5. கலைஞனின் பயிற்சி -பழக்கம் அவனது ஆழ்ந்த மனக்கிளர்ச்சி.
6. நுகர்வோர் தளத்தின் தரவேறுபாடு.

இதில் உள்ளடக்கம் பெரும் பங்காற்றுகிறது. படைப்பின் ஒவ்வொரு சொல்லிலும் மேற்கண்ட அம்சங்களைக் காண இயலும். நுகர்வோரின் தரத்திற்கேற்ப படைப்புக்கு ஆதரவும் புறக்கணிப்பும் அமையும்.

## சிறுகதைக் கூறுகள்

சிறுகதைக் கூறுகளாக பின்வருவனவற்றைச் சொல்லலாம்.

1. கதைக்கருத்து அல்லது உள்ளடக்கம்.
2. கதைப்பின்னல் அல்லது உத்தி.
3. கதை மாந்தர் படைப்பு .
4. நோக்கு நிலை.
5. குறியீடு.
6. பின்னணி.
7. நடை.

இக்கூறுகள் எல்லாம் ஒன்று மற்றொன்றோடு இணைந்து செயல்பட்டு சிறுகதைக்கு ஒரு வடிவத்தினையும் அமைப்பினையும் தருகின்றன.

## உள்ளடக்கம்

ஒருசிறுகதையின் மையக்கருத்தைச், சுருக்கமாகவும் முழுமையாகவும் வெளியிடும் கூறு உள்ளடக்கம். கூறப்படும் கதை எதைப் பற்றியது என்பது கருப்பொருள். இதை அடிப்படையாகக் கொண்டு சமூகச் சிறுகதைகள், வரலாற்றுச் சிறுகதைகள், புராண இதிகாசக் சிறுகதைகள், அறிவியல் சிறுகதைகள், நகைச்சுவை சிறுகதைகள் என்று வகைப்படுத்துவர். பொதுவாக சிறுகதைகளை மூன்று வகைகளுக்குள் அடக்கலாம் என்கிறார் ஸ்டீவன்சன்.[6]

| | |
|---|---|
| கருவினால் சிறந்த கதை | (Story of plot) |
| பாத்திரப் படைப்புச் சிறந்த கதை | (Story of character) |
| உணர்ச்சிப் பதிவுக் கதை | (Story of impression) |

மணிக்கொடிக் காலச் சிறுகதைகள் உள்ளடக்கங்களில் புதிய வகைகளைக் கொண்டிருந்தன. மணிக்கொடிக் குழுவினர் கதை நிகழ்ச்சிகளைவிட மனோபாவத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பர் திறனாய்வாளர்.[7]

பலவகைச் சமூகச் சிக்கல்கள் சிறுகதைகளின் உள்ளடக்கமாக கருக்கொண்டன.

## கதைப்பின்னல் அல்லது உத்தி

தலைப்பு தொடங்கி கதை முடியும் வரை கதையை அமைக்கும் முறை, கதையைச் சொல்லும் உத்தி, ஆகியவற்றுள் படைப்பாளிகள் தத்தமக்குரியதாக ஒன்றைச் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். எந்த ஒரு சிறுகதைக்கும் அடிப்படையான மூலக்கருத்து ஒன்று உண்டு. இதைப்பல நிகழ்வுகளின் மூலம் விளக்கலாம். இவற்றைக் கலைஞர் ஒன்றன் பின் ஒன்றாக அமைக்கும் பொழுது கதைக்கு ஓர் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இப்படி அமைக்கும் முறையே கதைப்பின்னலை அமைக்கும் முறையாகும். இங்கு கதைப் பின்னல் இரு முறைகளில் உருவம் கொள்கின்றது என்பர் திறனாய்வாளர்.[9]

1.நிகழ்ச்சிகளைக் கொண்டு விளக்கும் முறை.

2.பாத்திரங்களின் உணர்வுகளைக் கொண்டு விளக்கும் முறை

முதல் வகையில் கதைப்பின்னல் அமைப்பவர்களாக பி.எஸ்.ராமையா, ந.பிச்சமூர்த்தி, கல்கி, தி.ஜானகிராமன் ஆகியோரையும் இரண்டாம் வகையில் கதைப்பின்னல் அமைப்பவர்களாக கு.ப.ரா., மௌனி, லா.ச.ரா. ஆகியோரையும் கூறலாம்.

## தொடக்கம்

தொடக்கம் என்பது ஒரு சிறுகதையின் தரத்தை நிர்ணயிப்பது அல்ல. தரம் கதைப்பொருளாலும் மொத்தக் கதை அமைப்பும் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. தொடக்கத்தின் பணி ஆவலைத் தூண்டி வாசகனைப் படிக்கச் சொல்வதே ஆகும்.

கதையில் எழுப்பப்பட்ட சிக்கலைப் பற்றியோ, கதை மாந்தர் பண்பு பற்றியோ கதைக் கருப்பொருள் பற்றியோ மேன்மேலும் சிந்திக்கத் தூண்டுவதாக அமைந்தால் அது சிறப்பானது. அதனால் தான் மனதில் நிற்கும் முடிவு ஒரு நல்ல சிறுகதையின் அங்கம் என்பர் திறனாய்வாளர் இரா.தண்டாயுதம்[10].

கதை வளர்ச்சிக்கேற்ப முடிய வேண்டும். இப்படித்தான் முடியப்போகிறது என்று படிப்போர் தெரிந்து கொள்ளாத வகையிலும் முடிந்த பின்னர் இதுதான் சரியான முடிவு என்று அவர்கள் ஒத்துக்கொள்ளும் வகையிலும் வளர்ந்து செல்ல வேண்டும் என்பார் அகிலன்[11].

கதைத் தொடக்கத்தைவிட கதைமுடிவு முக்கியத்துவம் பெறுகிறது. கதையை வாசிப்பது நமது சிந்தனையில் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டு கோலாகி கதை முடியும் பொழுது அதைப்பற்றிய சிந்தனை முடிவடைந்து விடாது. இப்படிப்பட்ட கதைகள் முடிந்த பிறகுதான் ஆரம்பமாகின்றன என்று சொன்னால் விசித்திரவாதமாகத் தோன்றும் என்பார் புதுமைப்பித்தன்[12].

கதை முடிவில் எழும் நாதத்திற்குத் கதை முழுதும் எதிரொலி கொடுக்க வேண்டும் என்பார் ரா.ஸ்ரீ. தேசிகன்[13].

## சிறுகதை உத்திகள்

நனவோடை உத்தி, பின்னோக்கு உத்தி, முற்றுருவக உத்தி, முன்னிலை உத்தி, நாட்குறிப்பு உத்தி, கடிதமுறை உத்தி என்று கதையைச் சொல்லும் முறையைப் பல வகைகளாகப் கையாண்டுள்ளனர் படைப்பாளிகள்.

**நனவோடை உத்தி :** ஒரு குறிப்பிட்ட உணர்வு வயப்பட்டு நிற்கும்போது ஒரு முழு வாழ்க்கையையும் மனம்போன போக்கிலேயே காட்ட முயல்வது இவ்வுத்தியின் இயல்பாகும். வாக்கியங்களும், சொற்களும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாததாகத் தெரியும். அதே வேளையில்

## யாப்பிலக்கணம்

Unit-5

எழுத்துக்களால் ஆனது அசை. அசைகளால் ஆனது சீர்.சீர்களால் ஆனது அடி. அடிகளால் ஆனது பாட்டு அல்லது கவிதை. சீர்களை இணைக்கும் முறையில் ஓசை வேறுபாடு, பா வேறுபாடு ஆகியவற்றை உருவாக்க வேண்டிய நிலையில் வருபவை தளை, தொடை முதலியன. எழுத்துக்கள் தனித்தும், இணைந்தும் வருவதே அசை. இவை நேரசை,நிரையசை என இருவகைப்படும். அசை தனித்தோஅல்லது இணைந்தோ வருவது சீர் எனப்படும். அசையின் எண்ணிக்கையைப் பொறுத்து ஓரசைச்சீர், ஈரசைச்சீர் மூவசைச்சீர், நாலசைச்சீர் என வகைப்படுத்தப்படுகின்றன. நேரசையில் முடிவது மாச்சீர் என்றும் நிரையசையில் முடிவது விளச்சீர் என்றும் அழைக்கப்படும்.

# 7.2. புதுக்கவிதை

## புதுக்கவிதை விளக்கம்

" இலக்கணச் செங்கோல் /யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு/ மோனைத் தென்றல்
தனிமொழிச் சேனை /பண்டித பவனி
இவை எதுவுமில்லாத/கருத்துக்கள் தம்மைத்தாமே
ஆளக்கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி / முறையே
புதுக்கவிதை "

(ஞானரதம்)

என்று புதுக்கவிதையின் இலக்கணத்தையும், விளக்கத்தையும் சுருக்கமாகவும், தெளிவாகவும் வரையறை செய்கிறது மு.மேத்தாவின் அருமையான புதுக்கவிதை.

சங்ககாலந் தொடங்கி இன்றுவரை வழக்கில் உள்ள பழைய கவிதை மரபுகள் (யாப்பு, தளை, எதுகை, மோனை போன்றவை) தடையாகி நின்ற வேளையில் அத்தடைகளை உடைத்துப் புதிதாக வெளிப்பட்ட கவிதைகள் தாம் புதுக்கவிதைகள். மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்ற நியதி கவிதை உலகிற்கும் பொருந்துவதைக் காட்ட வந்தது புதுக்கவிதை எனலாம்.

இயற்கையோடு இயைந்த சங்க காலம் தொடங்கி இந்த நூற்றாண்டு வரை எழுந்த கவிதை இலக்கியங்களின் யாப்பு முறை உள்ளடக்கத்திற்கு ஏற்றாற்போல காலந்தோறும் மாறிக் கொண்டே வருவதைப் பார்க்கிறோம். இலக்கணம் முதன்மைப் படுத்தப்பட்டு இது அற்புதமான கட்டளைக் கலித்துறை, அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்று போற்றப்பட்ட காலம், காலப்போக்கில் செல்வாக்கிழந்தது. புதிதாகக் கவிதை படைக்க விரும்புவோர் தம்முடைய தனிமனித அனுபவத்திற்கும் சமூக அனுபவத்திற்கும் வடிகால் தேட முற்பட்டனர். யாப்பினைக் கற்றுக் கவி பாடவேண்டும் என்ற நிலையை வெறுத்தனர். இலக்கணம் மீறி எழுதவேண்டும் என்பதற்குக் காரணமே அந்த

## புதுக்கவிதை வளர்ச்சி

தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதை வளர்ச்சியினை மூன்று கால கட்டமாகக் காணலாம்.

| | |
|---|---|
| மணிக்கொடிக் காலம் | 1930 -1945 |
| எழுத்துப் பரம்பரை | 1950 -1970 |
| வானம்பாடிக் கவிஞர்கள் | 1970 முதல் |

மணிக்கொடிக் குழுவைச் சார்ந்த கவிஞர்களாக புதுமைப்பித்தன், ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா.வல்லிக்கண்ணன் ஆகிய நால்வரையும் குறிப்பிடலாம்.

## திறனாய்வு

தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதை வளர்ச்சியினைக் காணும்போதே அதுபற்றிய திறனாய்வும் ஒருபக்கம் நிகழ்ந்து கொண்டிருந்ததைக் காணலாம். தொடர்ந்து திறனாய்வு நிகழ்ந்து கொண்டிருப்பதையும் காணலாம். அவ்வகையில் வல்லிக்கண்ணனின் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (1977) புதுக்கவிதையின் வளர்ச்சியை வரலாற்று நோக்கில் எழுதியிருந்தாலும் புதுக்கவிதை பற்றிய முதல் திறனாய்வு நூலாக இதனைக் குறிப்பிடலாம்.

புதுக்கவிதை பற்றிய வல்லிக்கண்ணனின் இந்நூலை ஒரு சாதனை என்று சி.சு.செல்லப்பா பாராட்டுவது பொருத்தமே.

சில குறிப்புகளை மட்டும் இங்கே காணலாம். தனது கனவுகள். கற்பனைகள், எண்ணங்கள் அனைத்தையும் மரபுரீதியான யாப்பு முறைகளுக்கு உட்படும் கவிதைகளின் விதம் விதமான வடிவங்களை வெளிப்படுத்திய கவிபாரதி இலக்கணத்துக்கு உட்படாத புதிய வடிவத்திலும் உருக்கொடுக்க முயன்ற வெற்றியும் கண்டார். அதுதான் காட்சிகள் என்ற வசன கவிதைத் தொகுப்பு.[12]

எழுத்துருவில் இதுவரை வெளிவந்திருக்கும் நூற்றுக்கும் அதிகமான கவிதைகள் புதுக்கவிதையில் சத்தான, தாக்கான குணங்களை நிரூபித்திருக்கின்றன. சி.மணியின் நரகம் புதுக்கவிதை முயற்சியில் ஒரு மைல் கல்லை நாட்டுகிறது. நீளத்தில் மட்டுமல்ல உள்ளடக்கம், உருவ அழகு, படிமச் சிறப்பு, வாழ்க்கைப் பார்வை, மதிப்பு தத்துவ நோக்கு உத்தி கையாளுதல் இத்யாதி வகைகளில் சிறப்புற்று விளங்குகிறது.[13]

புதுக்கவிதைத் திறனாய்வு நூல்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.தமிழவன் எழுதிய புதுக்கவிதை - நாலு கட்டுரைகள் 1977

1.ஆதி நிலைகளைத்திரும்பிப் பார்க்கும் இன்றைய கவிஞன்

2. மொழி உருவாக்கத்திற்குரிய மொழி அழிவு ஏற்படாமையும் சமுதாய பிரக்ஞைக் கவிஞர்களும்

3.உடைபடும் புதுப்பிராந்தியங்கள்

4.வாழ்தலில் உள்ள துக்கமும் விமர்சன யதார்த்த வெளியீடும்

ஆகிய கட்டுரைகளில் புதுக்கவிதை பற்றிய தமிழவனின் திறனாய்வுச் சிந்தனைகளின் ஆழத்தை அறியலாம்.

2.ஆ.செகந்நாதன் எழுதிய புதுக்கவிதைத் திறனாய்வு (1978) சமூகப் பிரக்ஞையோடு கவிதை எழுதியுள்ள முற்போக்குக் கவிஞர்களின் படைப்புகள் மட்டுமே இதில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

3.புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை பாலா (1981) புதுக்கவிதை தோன்றிய காலமும் களமும், மரபும் மாற்றமும், செய்யுள் - வசனம் கவிதை, பாரதிக்குப் பின் நேர்ந்த தேக்கம்- புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, புதுக்கவிதை வெளியீட்டுப்புதுமை எதிர்கால நம்பிக்கைகள், மறுபார்வையில், இருபதாம் நூற்றாண்டின் இறுதி நாட்களில் புதுக்கவிதை என்ற தலைப்புகளில் புதுக்கவிதைகளை விரிவாக ஆய்வு செய்கிறார். படிமம்,குறியீடு இவை பயன்படுத்தப்படும் விதம் எப்படிப்பயன் படுத்த வேண்டும் என்பது பற்றியும் விவரிக்கிறார். சில கவிஞர்களைப் பற்றிய மதிப்பீடும் உள்ளது.

* மரபுப் பயிற்சியில் பெற்ற ஓசைத் தன்மையை அளவாகவும் படிமங்கள் குறியீடுகளைச் சிறப்பாகவும் கையாள்பவர் புவியரசு அவருடைய வெளியீட்டுத் தொனியும் பிற வானம்பாடிக் கவிஞர்களிடமிருந்து வித்தியாசமானது.[14]